அரசு ஊழியர் – ஆசிரியர்கள் நலன் கருதி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகளுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!

## அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஏப்.29-

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் அதன் நிறுவனத் தலைவர் சா. அருணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-



அரசு நடைமுறைப்படுத்தி வருகிற நலத் திட்டங்கள், யாருக்கும் விட்டுப் போகாமல், அனைத்து மக்களையும் சென்றடைய பணியாற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் இந்த தருணத்தில் தமிழ்நாடு அரசின் சார்பிலேயும், தனிப்பட்ட முறையிலேயும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன் என்ற பேச்சு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறு உருவம் தான் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின அவர்கள் என்பதை பறைச்சாற்றியுள்ளது

அரசு ஊழியர் ஆசிரியர்களின் நீண்டகால எதிர் கால வாழ்வாதாரா கொரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய கொண்டுவருவது ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் உள்ளிட்ட ஒன்பது அறிவிப்பு களை சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் இன்று அறிவித்து எல்லோருக்குமான முதலமைச்சர் என்பதை நிலுபித்துக் காட்டியுள்ளார்

சென்ற அதிமுக ஆட்சியில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நிதி நிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட அரசு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தை 01.04.2026 முதல், 15 நாட்கள் வரை பெற்றுக் கொள்ளலாம் அறிவித்திருந்த நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் கோரிக்கையேற்று 01.10.2025 அன்று இருந்தே ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தை பெறலாம் என்று அறிவித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஒப்பற்ற முதல்வர் என்பதையே காட்டுகிறது

இந்த அறிவிப்பின்படி, சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 3 ஆயிரத்து 561 கோடி ரூபாய் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

அதோடு ஒன்றிய அரசு எப்போது எல்லாம் அகவிலைப்படியை உயர்த்தி வழங்குகிறதோ அப்போதெல்லாம் அதே தேதியிட்டு வழங்கப்படும் என்ற முதமைச்சர் கூற்றின்படி 01-01-2025 முதல் 2 விழுக்காடு அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் 01.01.2025 முதல் அகவிலைப்படி 2 விழுக்காடு உயர்த்தி வழங்கி இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறு வார்கள். இந்த உயர்வினை நடைமுறைப்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 1252 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, சொல்வதை செய்ய கூடிய முதலமைச்சர் தான் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்

அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர் கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்து இந்தக் கல்வி முன்பணம் உயர்வால் தங்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில விரும்பும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள் என்ற அறிவிப்பை அறிவித்து இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநில முதலமைச்சர்களுக்கான முதன்மை முதலமைச்சர் என்பதை உலகறிய செயதுள்ளார்

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயி லிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் சுமார் 24 கோடி ரூபாய் ஒதுக்கி ஓய்வூதியர் குடும்ப ஓய்வூதியர்களின் நலன் காப்பவர் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதலாக வழங்கி என்றும் உங்களுக்கான முதல மைச்சர் தான்தான் என்பதை அங்கீகரித்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்டாள் எதிர்கால வாழ்வாதாரா கோரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டுவர 2003-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சில் கோரிக்கைவைத்து போராடியபோது அரசு ஊழியர்களை கொடுமைக்கு ஆளாக்கி வஞ்சித்து சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது வழக்குகள் தொடர்ந்து சிறையில் அடைத்து துறை ரீதியான நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்து வாழ்க்கையே கேள்விக்குறி ஆக்கி இருண்ட காலமாக்கியது அது மட்டுமா 2018-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அதிமுக ஆட்சியில் இதே கோரிக்கைகளை முன் வைத்து காலவரையற்ற போராட்டத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபட்டபோது சுமார் 5500 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது வழக்கு தொடர்ந்து சிறையில் அடைத்து பணியிடை நீக்கம் செய்தார்கள். மேலும் பல ஆயிரக்கணக்கானோரை பணியிட மாற்றம் செய்து பந்தாடினார்கள்.

இந்த சூழ்நிலையில் அப்போதைய எதிர்கட்சித் தலைவராக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போராட்டக்கலத்திற்கே நேரடியாக வந்து நீங்கள் உங்களை வருத்திக் கொண்டு போராட வேண்டாம் நான் ஆட்சிக்கு வந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றி தருகிறேன் என சூளுரையாற்றினார். அதோடு நின்று வடாமல் தேர்தல் அறிக்கையிலும் இடம்பெற செய்தார் துறை ரீதியான நடவடிக்கைகளை ரத்து செய்தார் வழக்குகளை திரும்ப பெற்றார் அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட அகவிலைப்படியை ஆறு மாதங்கள் கழித்து வழங்கி பின்பு எப்போதெல்லாம் ஒன்றிய அரசு அகவிலைப்படிய்யை உயர்த்தி வழங்குகிறதோ அதே தேதியிட்டு வழங்குவேன் என அறிவித்து வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் அதாவது சொல்வதை தான் செய்வோம் , செயவதை தான் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை கையில் ஏந்தி செய்து வருகிறார் , அந்த வகையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் குறித்து அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டார்.

மேலும் திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதி காண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதி காண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருதை நிருபிக்கும் வகையில் , அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது என்ற அறிவிப்பு சொல்வதை செய்யக் கூடிய முதலமைச்சராகவும் , செய்வதை சொல்வ கூடிய முதமைச்சராகவும், சொல்லாததையும் செய்ய கூடிய முதலமைச்சர் என்பதை பறைசாற்றி யுள்ளார்

ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறுவுருவம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சாந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவூர்.சா.அருணன் தெரிவித்துள்ளார்.




வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர் மா.ப.அன்புநிதி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சி.கோபி, பகுதி செயலாளர்கள் தயாள்ராஜ், தி.அ.முனைவர் பாஷா, டாக்டர் முகமது சயி, அயலக அணி ரமேஷ், ஒன்றிய குழு உறுப்பினர் கிருபாகரன், துரைஅரசன் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி. சோழன்

ஏப்ரல் 30 (2001)



பெங்களூர் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர். கர்நாடக மாநில அமைப்பாளராக பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டில் கர்நாடக மாநில தி.மு.க. முதல் மாநாடு சிறப்பாக நடைபெற்றதில் விளம்பரச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டதன் விளைவாக, கலப்புத் திருமணத்தை ஏற்கின்ற வகையில் வேறு சாதியைச் சார்ந்த ஒரு கைம்பெண்ணைக் கைப்பிடித்து, அண்ணா அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக 1986ஆம் ஆண்டு தலைமைக் கழகம் அறிவித்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை இவர் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தினார். இதனால் காவல்துறை வழக்கு போட்டு கைது செய்து சிறையில் அடைத்தது.

1997ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கடுமையான நிதி நெருக்கடியிலும்

# ஆசிரியர் - அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை!

சென்னை, ஏப். 30-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

“நான் செய்யாமல் யார் செய்வது?” என்று அன்புடன் சொல்லி வந்த முதலமைச்சர் இன்று பெரும்பாலானவற்றை செய்துள்ளார் கடுமையான நிதி நெருக்கடியிலும் ஆசிரியர் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சருக்கு நன்றி. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலனில் என்றும் அக்கறை உள்ளவராக டாக்டர் கலைஞர் இருந்து வந்தார்.

2003 ஆம் ஆண்டு எஸ்மா டெஸ்மா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்களின் தண்டனைகள் அனைத்தையும் ரத்து செய்ததோடு,ஒரு லட்சத்து எழுபத்து மூன்றாயிரம் பணி வாய்ப்பினை மீண்டும் வழங்கியதோடு மட்டுமல்லாமல் 2004 ஆம் ஆண்டு தொகுப்பூதிய முறையில் நியமனம் செய்யப்பட்ட 53000 ஆசிரியர்களை கடந்த 2006 ஆம் ஆண்டு தி.மு.க.அரசு அமைந்த முதல் நாளே கையொப்பமிட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பாதுகாவலன் என்பதை கலைஞர் அவர்கள் நிரூபித்தார்.

2006 ஆம் ஆண்டு ஆறாவது ஊதியக்குழுவின் பயன்களை 31.5.2009 வரை நியமிக்கப்பட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் நீட்டிப்புச்செய்து அதற்கான ஆணையை அந்நாளைய துணை முதல்வரான இன்றைய முதலமைச்சர் உத்தரவிட்டதை நாங்கள் என்றும் மறக்கவில்லை.

ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி மாணவர்களுக்கு சத்துணவில் வழங்கப்பட்ட முட்டை, கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்று நோக்கத்தோடு இலவச பயண அட்டை, அரசுப் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கட்டணம் ரத்து, அனைத்து அரசு பள்ளிகளிலும் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள்,அரசு பள்ளிகளின் தரத்தை உயர்த்திட மாணவர்களின் நிலையை உயர்த்திட எதிர்காலத்தை ஒளிமயமாக்கிட ஏராளமான திட்டங்கள்.

உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னோடி என அளப்பரிய சாதனை புரிந்து வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி உடையவர்களாக இருந்து வருகிறோம்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் கல்வித்துறையை சீரழிக்க வேண்டும் என்ற நோக்கோடு புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் நிதியை வழங்க முடியும் என்று தற்காலிக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலையிலும் மாநில நிதியிலிருந்து தடையின்றி ஊதியம் வழங்கியது.

பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டிய நிதி தடைபட்ட போதும் இது நாள்வரை எந்த பணியிடங்களுக்கும் ஊதிய தட்டுப்பாடின்றி ஊதியம் வழங்கிட சிரத்தையுடன் பணியாற்றும் தமிழ்நாடு முதல மைச்சருக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறோம்.

இன்று சட்டப்பேரவையில் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திடும் நோக்கத்தோடு அமைக்கப்பட்ட குழுவின் காலக்கெடுவை செப்டம்பர்மாதமாககுறைத்திருப்து, ஓய்வூதியம் சார்ந்த ஒரு நல்ல முடிவை திராவிட மாடல் அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையை தருவதாக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு இருக்கிறது.



இந்த நிதி நெருக்கடியான சூழலிலும் ஒன்பது முத்தான அறிவிப்புகளை அரசு ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு அறிவித்திருப்பதன் மூலமாக இந்த அரசு தான் என்றும் ஆசிரியர் அரசு ஊழியரின் நலனில் அக்கறை கொண்டது என்பதை மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்நிரூபித்திருக்கிறார்.

ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் காலத்தை 2025 அக்டோபர் மாதம் முதலாக வழங்குவதாக அறிவித்திருப்பதும், அரசு ஊழியர் ஆசிரியர்களின் பிள்ளைகளின் திருமணத்திற்கு ரூபாய் 5 லட்சம் முன்பணம் வழங்குவதற்கான அறிவிப்பும், பெண் ஆசிரியர்களுக்கு பேறுகால விடுப்பின் போது தகுதிகாண் பருவத்தில் அந்தக் காலம் கழிக்கப்படும் நிலை இருந்தது அதனை மாற்றியமைத்து இருப்பது ஒட்டுமொத்த பெண் ஊழியர்களுக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

பண்டிகை முன்பணத்தை 10 ஆயிரத்திலிருந்து இருபதாயிரம் ஆக மாற்றியிருப்பது பண்டிகை காலத்தில் மிகுந்த பயன் அளிக்கக்கூடிய நிதி உதவியாக இருக்கும்.

இவ்வாறு ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் எண்ண ஓட்டத்தை அறிந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்புகளை வெளியிட்டிருப்பதோடு, நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு ஒட்டுமொத்த அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியை தரக்கூடியதாகவும் நம்பிக்கையை வளர்ப்பதாகவும் இருக்கிறது.

ஒன்றிய அரசின் வஞ்சகம், கடந்த ஆட்சியால் ஏற்பட்ட நிதி சுமை, கொரோனா பேரிடர் காலத்தில் ஏற்பட்ட நிதி சுமை இவற்றையெல்லாம் கடந்து இன்று ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு 9 முத்தான கோரிக்கைகளை அறிவித்து எங்கள் நெஞ்சமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்களின் கோடான கோடி! நன்றி! நன்றி!

இதுவரை பெற்ற அனைத்தும் இனிமேல் பெறப்போகும் அத்தனையும் திமுக ஆட்சி காலத்திலேயே சொன்னதை செய்பவர் ஏன் சொல்லாததையும் செய்பவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த கால வரலாறுகள் அதை நிரூபித்திருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த முதல்வர்களில் தன்னிகரில்லா தனித்துவமான முதலமைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றும் பக்கபலமாய் இருப்போம்.

இவ்வாறு கு.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் முன்வைத்த

# கோரிக்கைகளை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

## மாநிலத் தலைவர் த. அமிர்தகுமார் அறிக்கை!

சென்னை, ஏப்.30-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோர்களுக்கு அகவிலைப்படி உயர்வினை 53 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக அதாவது 2 சதவீதம் உயர்த்தியதோடு, இவ்வுயர்வினை ஜனவரி தேதியிலிருந்து உயர்த்தி வழங்க உத்தரவிட்டமைக்கு நூற்றாண்டு பாரம்பரியமிக்க தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.



ஒன்றிய அரசு வழங்கும் அதே நாளிலிருந்து மாநில அரசும் அகவிலைப்படி உயர்வினை வழங்க வேண்டும் என 04.04.2025 அன்று முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் கோரிக்கை வைத்து இருந்தோம். இக்கோரிக்கையை உடனே நிறைவேற்றி தந்ததோடு, 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பலன் அடையும் விதமாக நிலுவையின்றி ஜனவரி மாதத்திலிருந்து வழங்குவதாக அறிவித்துள்ளமைக்கு மிக்க மகிழ்ச்சி.

தமிழ்நாடு அரசு அலுவலர் அலுவலர் ஒன்றியம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக சட்டமன்றத்தில் விதி எண் 110 கீழ் அறிவித்துள்ளது மகிழ்வை தருகிறது.

ஈட்டிய விடுப்பிற்கான பணபலன் பெறுவதை 01.04.2026 முதல் வழங்கப்படும் என்பதை முன்தேதியிட்டு 01.10.2025 முதல் வழங்குவதாக அறிவிப்பு.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. பொன்னுரங்கம்

ஏப்ரல் 30 (2021)



கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சென்னை மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.